**சுருக்கம்**

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்–1987–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 6 (1)–ன்படி, பெரம்பலூர் விற்பனைக்குழு, வேப்பந்தட்டை வட்டம், பூலாம்பாடி கிராமத்தில் புதியதாக பூலாம்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மைத் (வேவி2.(1)) துறை**

அரசாணை (நிலை) எண்.51

நாள்: 21.02.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048,
மாசி திங்கள் 09–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.152, வேளாண்மை(வே.வி.2) துறை, நாள் 02.06.1998.
2. அரசாணை (நிலை) எண்.64, வேளாண்மைத்(வேவி2)துறை, நாள் 17.02.1999.
3. அரசாணை (நிலை) எண்.41, வேளாண்மைத்(வேவி2)துறை, நாள் 21.02.2014.
4. அரசாணை (நிலை) எண்.42, வேளாண்மைத் (வேவி2)துறை, நாள் 21.02.2014.
5. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண். விகுதி2/ 27407/2012, நாள் 29.12.2014.
6. அரசாணை (நிலை) எண்.294, வேளாண்மைத் (வேவி.1) துறை, நாள் 05.10.2016.

---

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, வருவாய் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதியதாக ஏற்படுத்தப்பட்ட மாவட்டங்களை அடிப்படையாகக்கொண்டு தனித்தனியே விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தி ஆணை வெளியிடப்பட்டது. அவற்றுள் திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவினை மூன்றாகப் பிரித்து, திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவும், கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு கரூர் விற்பனைக்குழுவும் மற்றும் பெரம்பலூாரைத் தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் விற்பனைக்குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவின் கீழ் அறிவிக்கையிடப்பட்ட கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த பகுதிகளை நீக்கம் செய்திடவும், கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் வேளாண்மை விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்தவும் முதனிலை அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி திருச்சிராப்பள்ளி விற்பனைக் குழுவிலிருந்து கரூர் மாவட்டத்திற்கென தனி விற்பனைக்குழு தோற்றுவிக்கப்பட வேண்டும் என வெளியிடப்பட்டதை ரத்து செய்தும், மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையின்படி திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவினை இரண்டாகப் பிரித்து திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் விற்பனைக்குழுக்களை ஏற்படுத்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பெரம்பலூர் விற்பனைக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு ஒரு செயலாளர் மற்றும் ஒரு மேலாளர் ஆகிய இரு பணியிடங்களுக்கு புத்துயிர்ப்பு அளித்தும், பெரம்பலூர் விற்பனைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 42 பணியிடங்கள் பணியிடப் பெயர்ச்சி மூலம் நிரப்பிடவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5. இதற்கிடையில், மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடிதத்தில், பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் கோரிக்கையின் அடிப்படையிலும், வேப்பந்தட்டை வட்டார விவசாயிகள் நலன் கருதியும், திருச்சி விற்பனைக்குழு செயலாளர் தெரிவித்த குறிப்புரையின் அடிப்படையிலும், 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 6 (1) ன்படி பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டாரம், பூலாம்பாடி கிராமத்தில், பெரம்பலூர் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டில் புதியதாக பூலாம்பாடி கிராமத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தோற்றுவிக்க உரிய ஆணை வழங்கிடும்படி வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இப்பொருள் குறித்து ஒருங்கிணைந்த திருச்சிராப்பள்ளி விற்பனைக்குழுவின் தீர்மானத்தையும் பெற்று அனுப்பியுள்ளார்.

6. மேலே பத்தி (5)–ல் தெரிவிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று 1987–ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ், நெல், வேர்க்கடலை (தோலுடன் கூடியது மற்றும் தோல் நீக்கிய பருப்பு) எள், மிளகாய், கொத்தமல்லி, முந்திரி (அனைத்து வடிவங்களிலும்), கரும்பு வெல்லம் அனைத்து வடிவங்களிலும் (வெல்லத்தூள், பழுப்பு சர்க்கரை), கம்பு (அனைத்து வடிவங்களிலும்), கேழ்வரகு (அனைத்து வடிவங்களிலும்), சோளம் (அனைத்து வடிவங்களிலும்), உளுந்து (அனைத்து வடிவங்களிலும்), மஞ்சள் (கிழங்கு அல்லது விரலி மஞ்சள்), மரவள்ளி (மரவள்ளிக்கிழங்கு, மரவள்ளி சீவல், மரவள்ளிகிழங்கு மாவு, மரவள்ளிக்கிழங்கு ஸ்டார்ச்), பருத்தி (கப்பாஸ், லிண்ட் பருத்தி, கழிவு பருத்தி), இளநீர் நீங்கலான தேங்காய் அனைத்து வகை மற்றும் புகையிலை அனைத்து வடிவங்களிலும் ஆகிய விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவதற்குரிய வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் விற்பனைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் பூலாம்பாடி கிராமத்தில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பெரம்பலூர் விற்பனைக் குழுவினால் தோற்றுவிக்கப்பட வேண்டும் எனப் பணித்து (direct) ஆணையிடுகிறது.

7. மேற்கண்டவாறு புதிதாக தோற்றுவிக்கப்படும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு, 1987-ம் வருடத்திய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 6 (2)-ன்படி விற்பனைப் பகுதிகள் குறித்த அறிவிக்கை வெளியிடுதல் குறித்த கருத்துருவினை, அரசுக்கு அனுப்பிவைக்குமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>

ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32 .
தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை-32.
மாவட்ட ஆட்சித்தலைவர், பெரம்பலூர்.
செயலாளர், திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் விற்பனைக்குழு (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை - 32 மூலமாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை-108.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை -9.

**நகல் :-**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை-9.
சட்டத்துறை/ நிதித்துறை/பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை, சென்னை-9
வேளாண்மை (வேவி1/வேவி3/வ&தி) துறை, சென்னை-9
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை-9 ( அட்டவணைப்படுத்தும் வகைக்கு)
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தி. சண்முகம் 23/2/17
பிரிவு அலுவலர்.

23.2.17